සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

නර්තනය (භරත) I
நாட்டியம் (பரதம்) I
Dancing (Bharatha) I

53 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** ஆனந்தக் கூத்தின் திருக்கரங்கள் நான்கினுள் 'துடி' ஆனது எக்கரத்தில் எத்தொழிலை குறித்து நிற்கின்றது?
(1) வலதுகரம் - காத்தல்
(2) வலதுகரம் - படைத்தல்
(3) இடதுதுகரம் - அழித்தல்
(4) இடதுகரம் - படைத்தல்
(5) வலதுகரம் - அழித்தல்

**2.** அபிநயங்களில் நாட்டிய அரங்கமானது
(1) வாச்சிக அபிநயம்
(2) ஆங்கிக அபிநயம்
(3) ஆஹார்ய அபிநயம்
(4) சாத்விக அபிநயம்
(5) சூசிகா அபிநயம்

**3.** நடனமாடும் விறலியின் அழகையும் குரவைக் கூத்தினையும் வெறிக்கூத்தினையும் மக்கள் ஆடிய முறையை விபரிப்பது
(1) சிறுபாணாற்றுப்படை
(2) பட்டினப்பாலை
(3) திருமுருகாற்றுப்படை
(4) கூத்தராற்றுப்படை
(5) புறத்திணை

**4.** திஸ்ர ஜாதி ரூபகதாளம் திஸ்ர கதியாக மாறும்போது எடுத்துக்கொள்ளும் எண்ணிக்கை
(1) 15 (2) 18 (3) 21 (4) 27 (5) 33

**5.** சடங்கியல்புகளோடு தொடர்புடைய சாஸ்திரிய நடனம்
(1) குச்சுப்புடி (2) ஒடிசி (3) மணிப்புரி (4) கதக் (5) கதகளி

**6.** சாக்கையர்களுடன் தொடர்புடைய இரண்டு வகையான ஆற்றுகைகள்
(1) கூடியாட்டம், பாகவதமேளம்
(2) பிரபந்தக்கூத்து, யக்ஷகானம்
(3) பாகவதமேளம், யக்ஷகானம்
(4) பிரபந்தக்கூத்து, கூடியாட்டம்
(5) கூடியாட்டம், யக்ஷகானம்

**7.** பாத பேதங்களில் இடுப்பில் இருகைகளையும் வைத்து இரு பாதங்களையும் சேர்த்து நிற்கும் நிலைகள்
(1) சமசூசி, மோட்டிதம், சமபாதம்
(2) மண்டலம், ஸ்தானகம், சமபாதம்
(3) சமபாதம், ஏகபாதம், மண்டலம்
(4) ஸ்தானகம், மண்டலம், சமசூசி
(5) மோட்டிதம், ஸ்தானகம், சமபாதம்

[பக். 2 ஐப் பார்க்க

8. ஜாவளி உருப்படியினைக் குறிக்கும் பாடலடிகள் யாவை?
(1) மாலை மயங்கும் நேரம், ஹரி ரிக முக்த வதா
(2) வருவேன் வருவேன் என்று, சரிகை கொங்கு முக
(3) ஹரி ரிக முக்த வதா, என்னமோ கனமாக
(4) சரிகை கொங்கு முக, ஹரி ரிக முக்த வதா
(5) மாலை மயங்கும் நேரம், சரிகை கொங்கு முக

9. பதினோராடலில் இந்திராணி ஆடியது
(1) அல்லியம் (2) குடை (3) கடையம் (4) பேடி (5) மரக்கால்

10. "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்னும் பாடலடியில் வரும் உத்தம நாயகன் நாயகி
(1) துஸ்யந்தன் சகுந்தலை (2) இராமர் சீதை
(3) கிருஷ்ணன் ஆண்டாள் (4) நளன் தமயந்தி
(5) இராவணன் சீதை

11. மோகினி ஆட்டம் எந்தக் கடவுளை மையமாகக் கொண்டு ஆடப்படும்?
(1) பிரம்மா (2) சிவன் (3) விநாயகர் (4) விஷ்ணு (5) முருகன்

12. பாத பேதத்தில் 'அங்கப் ப்ரமரியினை' ஒத்த கண்டிய நடனத்தில் வரும் பாதநிலை
(1) மண்டிய (2) குஞ்சிதம் (3) பிரேங்கணம்
(4) ப்ரத்தியாலீடம் (5) ஸ்வஸ்திகம்

13. கர்த்துரு இராகங்கள் முப்பத்திரண்டிற்கும் இறைவனே மூலகாரணமானவன் என்பதை அறிவிப்பது
(1) பாம்பணி (2) திருவாசி (3) கபாலமாலை
(4) தூக்கிய திருவடி (5) சிலம்பும் கழலும்

14. சப்ரகமுவ சம்பிரதாயத்தில் மட்டும் காணப்படும் மிக முக்கியமான பெரஹர நடனம்
(1) கொஹோம்ப கங்காரிய (2) கம்மடுவ (3) நட்டயக்கும
(4) கோலம் (5) மஹாம்பா

15. பாம்பை வணங்கும் 'மஸ்டலர்' நடனம் இடம்பெறுவது
(1) குற்றாலக் குறவஞ்சியில் (2) பாகவதமேளத்தில்
(3) தியாகேசர் குறவஞ்சியில் (4) யக்ஷகானத்தில்
(5) கூடியாட்டத்தில்

16. வழிபாட்டிலும் போர்க்களத்திலும் திருமணச் சடங்கிலும் ஒலிக்கப்படும் இசைக்கருவி யாது?
(1) பறை (2) உடுக்கு (3) சங்கு (4) நாதஸ்வரம் (5) குழல்

17. கண்ட ஜாதி அடதாளத்தின் அங்கக் குறியீடு
(1) $|_5$ (2) $|_5 |_5$ O O (3) $|_5$ U O (4) $|_5$ O $|_5$ (5) $|_5$ O O

18. 'குறும்பல் யாணர்க் குரவை அயரும்' எனும் பாடலடியின் மூலம்,
(1) மலைவாழ் மக்கள் குறிஞ்சி நிலக் குரவையாடிய செய்தியினை அறியலாம்.
(2) வேடுவர் முல்லைத் திணைக் குரவையாடிய செய்தியினை அறியலாம்.
(3) நெய்தல் நில மக்கள் நெய்தல் நிலக் குரவையாடிய செய்தியினை அறியலாம்.
(4) பாலை நில மக்கள் பாலை நிலக் குரவையாடிய செய்தியினை அறியலாம்.
(5) உழவர் மருத நிலக் குரவையாடிய செய்தியினை அறியலாம்.

19. வடமோடிக் கூத்தில் பயன்படுத்தப்படும் ரஸங்கள்
(1) வீரம், ரௌத்திரம், கருணை
(2) சாந்தம், சிருங்காரம், பயானகம்
(3) கருணை, பீபத்ஸம், ரௌத்திரம்
(4) வீரம், ஹாஸ்யம், சாந்தம்
(5) ரௌத்திரம், கருணை, பீபத்ஸம்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**20.** 'கொல்லா கலாபம்' என்னும் நடன நாடகத்தினைத் தேவதாசிகளுக்குப் பயிற்றுவித்தவர்
(1) வேம்படி சின்னசத்தியம்
(2) பள்ளி பேரய்யா சாஸ்திரி
(3) வள்ளத்தோல் நாராயண மேனன்
(4) வைஜெயந்தி மாலா
(5) பத்மா மேனன்

**21.** பரதநாட்டிய அணிகலன்களில் சந்திரப்பிறை சூரியப்பிறை அணியப்படுவது
(1) மூக்கு (2) காது (3) தலை (4) இடுப்பு (5) கழுத்து

**22.** மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களைக் குருவாகக் கொண்டு வாய்ப்பாட்டும், பரதநாட்டியமும் கற்றவர்
(1) ஈ. கிருஷ்ணய்யர் (2) ஸ்ரீமதி பாலசரஸ்வதி
(3) கௌரி அம்மாள் (4) சபாரஞ்சிதம்
(5) ருக்மினி தேவி அருண்டேல்

**23.** 'ரத்னாவளி' என்னும் நாடகத்தில் ஈ. கிருஷ்ணய்யர் ஏற்று நடித்த கதாபாத்திரம்
(1) ரத்னாங்கி (2) வசந்தசேனா (3) வாசவதத்தா
(4) இராஜமோகினி (5) கோணங்கி

**24.** தகதிமி தகதிமி தகிட தத், திங்,
கி । ண தொம் தத், திங், கிண । தொம்
தத், திங், கிண தொம் ॥
மேற்படி பஞ்சஜாதி ததிங்கிணதொம் அமைந்துள்ள ஜாதி
(1) மிஸ்ரம் (2) திஸ்ரம் (3) கண்டம் (4) சங்கீரணம் (5) சதுஸ்ரம்

**25.** அற்புத ரஸத்தின் ஸ்தாயிபாவம், கடவுள், நிறம், எதிர் ரஸம் முறையே
(1) ரதி, விஷ்ணு, பச்சை, பீபத்ஸம்
(2) சோக, எமன், சாம்பல், ஹாஸ்யம்
(3) குரோத, ருத்திரன், சிவப்பு, அற்புதம்
(4) பயம், எமன், கறுப்பு, வீரம்
(5) விஸ்மய, பிரம்மன், மஞ்சள், ரௌத்ரம்

**26.** கோவலனைப் பிரிந்த கண்ணகியை உதாரணமாகக் கொண்ட சிருங்கார வகை
(1) அயோக சிருங்காரம் (2) விப்ரயோக சிருங்காரம்
(3) விகட சிருங்காரம் (4) சம்போக சிருங்காரம்
(5) லோலித சிருங்காரம்

**27.** கிராமிய இசைக் கருவிகளாவன
(1) தப்பு, மிருதங்கம், வயலின்
(2) சேமக்கலம், வீணை, பறை
(3) ஹார்மோனியம், பறை, வயலின்
(4) பறை, தப்பு, சேமக்கலம்
(5) மிருதங்கம், வயலின், வீணை

**28.** அரங்கின் ஒளியில் பரந்துபட்ட அழகியலை முதல் முதலில் கண்டவர்
(1) அரிஸ்டோட்டில் (2) பிளேட்டோ
(3) அடொல்ப் அப்பியா (4) ஈ. கிருஷ்ணய்யர்
(5) க. பொன்னையா

**29.** 'நான்முக கூத்தன்' எனும் சிறப்புப் பெயர் பெற்றவர்
(1) கூத்தனார் (2) பாணர் (3) விறலியர்
(4) கோடியர் (5) நிருத்த பேரரையன்

[பக். 4 ஐப் பார்க்க

30. ஆரூர்க் கோயில் பதியியலாளர்களாக இருந்து ஆடல் நிகழ்ச்சிகளை நிகழ்த்தியோர்
(1) உறசாக்கினி தலைக்கோலி
(2) ஐந்நூற்றுவ தலைக்கோலி
(3) வீராபரணத் தலைக்கோலி
(4) சிவஞானசம்பந்தர் தலைக்கோலி
(5) பூங்கொயில் நாயகித் தலைக்கோலி

31. கட்டுக்கடங்காத விருப்பமும் ஆசையும் கொண்டவள் 'கடவுளையே கண்ணில்லாதவள்' என நினைக்கும் பரகீயா நாயகிகளில் ஒருவர்
(1) முதிதை (2) குலடை (3) அனுசயானை (4) விதக்தை (5) குப்தை

32. அந்நியப் பெண்களைத் தன் சாமர்த்தியத்தால் வசப்படுத்தி அனுபவிப்பவன்
(1) பதி (2) வைசிகன் (3) அனுகூலன் (4) உபபதி (5) திரோதாத்தன்

33. 'ஹரிபாலர் சங்கீத சுதாகரம்' எனும் நூலில் குறிப்பிடப்படும் ஆறுவகை வீணைகளில் ஒன்று
(1) கச்சவி வீணை (2) ஆலாபினி வீணை
(3) ராவணி வீணை (4) கௌரி வீணை
(5) சரஸ்வதி வீணை

34. விரல்களைச் சத்தமின்றி எண்ணுதல்
(1) ஆலாபம் (2) நிஷ்சிராமம் (3) விட்சேபம் (4) பிரவேஷம் (5) சசப்தம்

35. சகசி மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட குறவஞ்சி
(1) குற்றாலக் குறவஞ்சி (2) மோகினி விலாசக் குறவஞ்சி
(3) தியாகேசர் குறவஞ்சி (4) கும்பேசர் குறவஞ்சி
(5) மயிலைக் குறவஞ்சி

36. சிருங்கார ரஸத்தின் அனுபவங்களாக அமைவன
(1) நிலத்தில் வீழ்தல், கண்ணீர் விடுதல்
(2) முஷ்டியினால் உள்ளங்கையில் அடித்தல், பற்களை நறுமுதல்
(3) தைரியம், ஆர்வம்
(4) மூக்கையும் வாயையும் மூடுதல், பிறாண்டுதல்
(5) கடைக்கண்ணால் பார்த்தல், பிரியத்தை வெளிப்படுத்தல்

37. அந்திமாலை வேளையில் இறைவன் புரியும் தாண்டவம்
(1) காளிகா தாண்டவம் (2) கௌரி தாண்டவம்
(3) திரிபுர தாண்டவம் (4) ஊர்த்துவ தாண்டவம்
(5) சந்தியா தாண்டவம்

38. சிவனிடம் அருச்சுனன் பாசுபதம் பெறும் கதையினைக் கூறும் கூத்து யாது?
(1) பொன்னர் சங்கர் (2) காமன் கூத்து
(3) அருச்சுனன் தபசு (4) வாசாப்புக் கூத்து
(5) மகுடிக் கூத்து

39. ஜெகநாதர் ஆலயத்தில் ஒடிசி நடனத்திற்கான வாய்ப்புக்களை வழங்கும் உற்சவம்
(1) டோல் ஜாத்ரா (2) கோஷ யாத்ரா (3) பகவதி வழிபாடு
(4) டொல் சந்திர (5) ஹோலிகர்

40. 'ஸ்ரீ கிருஷ்ண ஜலக்கிரீட' என்னும் நடன நாடகத்தை எழுதியவர்
(1) நரகத தீர்த்தர்
(2) கோபால கிருஷ்ண சரஸ்வதி
(3) கோபால கிருஷ்ண பாரதி
(4) வேம்படி சின்னசத்தியம்
(5) வள்ளத்தோல் நாராயண மேனன்

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



- **41** தொடக்கம் **45** வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| நாயகி | குணாதிசயம் | உதாரணம் | செய்கை | பதம் |
|---|---|---|---|---|
| **A** | விரக தாபத்தால் ஏங்கித் தவிப்பவள் | சீதை | தேகம் இளைத்தல் ஊன், உறக்கம் இன்மை, பிரிவால் வேதனை | "மோகமான விரஹதாபத்தால்..." |
| சுவாதீன பதிகா | **B** | சீதை | மலர்ந்த முகத்துடன் எப்போதும் சந்தோசமாக இருத்தல் | "சத்யம் செய்தே முருகன் பத்தினியே ரத்தினமே..." |
| அபிசாரிகா | நாயகனை நோக்கி நகர்பவள் | **C** | ஆவல், இன்பக்கனவு, சாதுர்யம் | யாருக்காகிலும் பயமா? |
| விப்ரலப்தா | நாயகனால் ஏமாற்றப்பட்டவள் | ராதா | **D** | நேற்றந்தி... நெருங்கி வந்து ஜாடை காட்டி அழைத்தவள் யாரோ? |
| கண்டிதா | நாயகனைக் கண்டிப்பவள் | பாமா | கண்டித்தல், பெரு மூச்செறிதல் முணுமுணுத்துப் பேசுதல் | **E** |

**41.** **A** இல் இடம்பெற வேண்டிய நாயகி

(1) ப்ரோஷித பர்த்ருகா (2) கலகாந்தரிதா (3) அபிசாரிகா
(4) விரஹோத் கண்டிதா (5) வாசகசஜ்ஜிகா

**42.** **B** இல் இடம்பெற வேண்டிய குணாதிசயம்

(1) நாயகனின் வருகைக்காக தன்னை அலங்கரிப்பவள்.
(2) நாயகனின் அன்பைப் பூரணமாகப் பெறுபவள்.
(3) தூர தேசம் சென்ற நாயகனைப் பிரிந்திருப்பவள்.
(4) நாயகனால் ஏமாற்றப்பட்டவள்.
(5) நாயகனிடமிருந்து கலகத்தால் பிரிந்தவள்.

**43.** **C** இல் இடம்பெற வேண்டிய உதாரணம்

(1) சகுந்தலை (2) தமயந்தி (3) சூர்ப்பனகை
(4) தடாகை (5) சுபத்திரை

**44.** **D** இல் இடம்பெற வேண்டிய செய்கை

(1) நாயகன் வரும் வழியை அடிக்கடி பார்த்த வண்ணம் வருங்காலத்தை எண்ணி மகிழ்தல்
(2) விரகதாபத்தால் கண்ணீர் விடுதல்
(3) கோபம், வெறுப்பு, காதலனை உதறித் தள்ளியபின் வருந்துதல்
(4) நித்திரை அற்றிருத்தல், யோசித்தல், தன்நாயகன் எப்போது வருவாரென்று அலைதல்
(5) மனத்தளர்ச்சி, உணர்ச்சிவசப்படல், தனது ஆசை நிராசையானதைக் கண்டு கலங்கி சில சமயங்களில் மூர்ச்சித்தல்

**45.** **E** இல் இடம்பெற வேண்டிய பதம்

(1) நீ போய் அழைத்து வா...
(2) கேலியாய் போனதடி ...
(3) தெருவில் வாரானோ...
(4) எட்ட நில்லும் என்று...
(5) என்னதான் சொன்னாரடி...

[பக். 6 ஐப் பார்க்க

**46.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சாஸ்திரிய நடனத்தில் அணியப்படும் அணிகலன் யாது?

(1) கடகம்
(2) டிக்கா
(3) நாகபடாதாலி
(4) ஜிப்பா
(5) புறுகு



**47.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தேவ ஹஸ்தம் யாது?

(1) இந்திரன்
(2) வருணன்
(3) சிவன்
(4) குபேரன்
(5) வாயு




**48.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நடனக் கலைஞருக்கு சாந்தி நிகேதன் விஷ்வ பாரதி பல்கலைக்கழகத்தினால் வழங்கி கௌரவிக்கப்பட்ட விருது

(1) பிராணி மித்ரா
(2) தேசிய கோதமா
(3) பத்மபூசன்
(4) முன்னணி நாட்டியமணி
(5) கௌரவ கலாநிதிப்பட்டம்



**49.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள படத்தில் அம்புக்குறி குறிப்படுவது

(1) வாசுகி
(2) சூரியன்
(3) வாயு
(4) சந்திரன்
(5) சிவன்



**50.** இப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமியக் கலை யாது?

(1) ஒயிலாட்டம்
(2) பொம்மலாட்டம்
(3) கரகாட்டம்
(4) குதிரையாட்டம்
(5) மயிலாட்டம்



* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



 සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

නර්තනය (භරත) II
நாட்டியம் (பரதம்) II
Dancing (Bharatha) II

53 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் **முதலாம்** வினா உட்பட **இரண்டு** வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) நீர் கற்ற பதவர்ணத்தின் முத்தாயிஸ்வரக் கோர்வையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (08 புள்ளிகள்)

(iii) நீர் கற்ற தில்லானாவின் இராகம், தாளம் என்பவற்றைத் தருக. (02 புள்ளிகள்)

(iv) நீர் கற்ற தில்லானாவின் முதலாவது பல்லவிக் கோர்வையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (08 புள்ளிகள்)

**2.** (i) கதகளி நடனத்தின் தோற்றம் பற்றிச் சுருக்கமாகத் தருக. (03 புள்ளிகள்)

(ii) கதகளி நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் **ஆறின்** பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) கதகளி நடனம் வளர்ச்சி அடைந்த விதம் பற்றி விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) கதகளி நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் ஒப்பனை முறைகள் பற்றி விரிவாக விளக்குக. (05 புள்ளிகள்)

(v) கதகளி நடனத்தின் ஆட்ட முறைகள் பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

**3.** பின்வரும் நிறுவனங்கள் கலைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினைக் குறிப்பிடுக.

(i) கலாசேஷத்திரா

(ii) சென்னை சங்கீத வித்துவ சபை

(iii) இராமநாதன் நுண்கலைத் துறை

(iv) சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்

($4 \times 5 = 20$ புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** சப்ரகமுவ நடனம் பற்றி விவரிக்குக. (20 புள்ளிகள்)

**5.** (i) பல்லவர் காலச் சிற்பங்கள் எடுத்துரைக்கும் ஆடற் செய்திகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பல்லவர் காலத்தில் நடனப்பணி செய்து வந்த நடன மாதர்களைத் தேவாரங்கள் சிறப்பித்துக் கூறும் பெயர்கள் **நான்கினைத்** தருக. (04 புள்ளிகள்)

(iii) தேவாரங்களினூடாக பல்லவர் கால ஆடல் அரங்கு பற்றிய குறிப்புக்களை எழுதுக. (06 புள்ளிகள்)

(iv) நாயன்மார்களின் பாடலடிகள் மூலம் வெளிப்படுத்தப்படும் பல்லவர் கால ஆடற்சிறப்புகளை விளக்குக. (08 புள்ளிகள்)

**6.** (i) மயிலாப்பூர் கௌரி அம்மாளின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

(ii) அவர் பரத நாட்டியக்கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** "பரத நாட்டிய உருப்படிகளைச் சிறப்பாக ஆற்றுகை செய்வதற்கு பரத நாட்டிய அடவுகளின் பயிற்சிகள் மிகவும் அவசியமானவை." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஆஹார்ய அபிநயம்

(ii) பாகவதமேளம்

(iii) யதி

(iv) பதவர்ணம்

(4 × 5 = 20 புள்ளிகள்)

❊ ❊ ❊


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 WWW.LOL.LK

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!